2011 ஆகஸ்ட் 19]

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 47, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

47—

கால்நடை மருத்துவமனை

***4418—திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, வடபட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிறப்புமிகு இந்த மாமன்றத்தில், எனக்கு நிகரில்லா பெரும் வாய்ப்பைத் தந்திட்ட ஒப்பில்லா தாய் உருவத் தெய்வமே, என் நன்றி மலர்களைத் தங்கள் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பித்து, என் பணி செய்திட விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, (அ) வடபட்டி கிராமத்திற்குக் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.*

திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னித் தமிழ்நாட்டின் காவல் தெய்வம், கழகத் தொண்டர்களின் கற்பக விருட்சம், ஏற்றமிகு தமிழகத்தின் எழுச்சி*

முழக்கம், அன்பின் பிறப்பிடம், அறநெறியின் இருப்பிடம், ஆற்றலின் பிரவாகம், முக்கடலும் சங்கமமாய் மூன்றாவது முறை முதல்வராக, தமிழகத்தை முன்னோடி மாநிலமாக்கி முத்திரைப் பதிக்க வந்திருக்கும் மூலக் கடவுள், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்கி என் கேள்வியைத் தொடர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பரிசீலனையில் உள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை என்றால், எந்த அடிப்படையில் பரிசீலித்து வடபட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படும், எப்பொழுது அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது எப்படியிருக்கிறது என்று சொன்னால், 'எனக்கு ஒரு உண்மை தெரிந்தாகவேண்டும்' என்பதுபோல் இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதுமே அம்மா அவர்களின் அரசு உண்மையைத்தான் சொல்லும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை மருந்தகம் எந்த அடிப்படையில் துவங்கப்படும், எப்பொழுது துவங்கப்படும் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கவேண்டுமென்று சொன்னால், கால்நடை பராமரிப்புத் துறை அந்தந்தப் பகுதிகளிலுள்ள கால்நடை எண்ணிக்கையினைப் பொறுத்து அப்பகுதியில் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது.

ஒரு கிராமத்தில் அல்லது அந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்திற்குமேல் இருக்குமானால், அங்கு ஒரு கால்நடை கிளை நிலையமும், கால்நடைகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்திற்குமேல் இருப்பின், அங்கு கால்நடை மருந்தகமும் அமைத்துத் தரப்படுகிறது. கால்நடை கிளை நிலையம் அமைக்கக்கோரும் இடத்திற்கும், ஏற்கெனவே அந்தப் பகுதியில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையத்திற்குமிடையே 5 கிலோ மீட்டர் தொலைவு இருக்கவேண்டும். கால்நடை மருந்தகம் அமைக்கவேண்டுமாயின், அப்பகுதிக்கு அருகில் செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும்

2011 ஆகஸ்ட் 19]

இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர் இருக்கவேண்டும். கால்நடை மருத்துவமனை துவக்கப்படவேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேல் கூடுதலாக இருக்கவேண்டும். கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவங்கப்படுகிறது. அதனடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய பகுதிக்கு இத்தனைத் தகுதிகளும் இருக்கின்ற காரணத்தினால், வடபட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எப்பொழுது துவக்கப்படும் என்ற கேள்வியையும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வடபட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் பணியை இந்த நிதியாண்டிலேயே துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள்.*

திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, வடபட்டி கிராமம் 36 பட்டிகளுக்குத் தலைநகராக விளங்குகின்றது. அங்கே 50,000–க்கும் மேல் ஆடுகளும், மாடுகளும் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களெல்லாம் ஆடு, மாடுகளுக்கான மருந்தகத்திற்கு 10 கிலோ மீட்டர் நடந்து செல்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வையில், வடபட்டி கிராமத்தில் கால்நடை மருந்தகம் இந்த ஆண்டிலேயே அமைக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியையும், எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இத்துடன் வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]